26/03/2026.

C.C.53/2023

**புகாாதாரா். மூர்த்தி த/பெ.கோவிந்தசாமி.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் கொடுத்த புகாரில் கையெழுத்து தேதி குறிப்பிட்டேனா என்றால் கையெழுத்து போட்டேன' ஆனால' தேதி குறிப்பிடவில்லை. 24.04.2023ம' தேதியிட்ட புகாரில் கையெழுத்திற்கு 10.05.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால' அதை நான் எழுதவில்லை. 24.04.2023ம் தேதியிட்ட புகாால் அடிப்பட்ட நாங்கள் வந்தவாசி அரசு மருத்துவமனையில் 22.04.2023ம் தேதி முதல் சிகிச்சையில் இருந்து வருகிறோம் என்று குறிப்பிட்ட நிலையில' புகாரை யாா' காவல' நிலையத்தில' கொடுத்தார்களா' என்றால் மருத்துவமனையில் இருந்து டிச்சார்ஜ் ஆனபிறகு புகார் கொடுத்தேன்.

மருத்துவா ' ஆவணம ' பெறவேண்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்துகொண்டு மருத்துவருக்கு தெரியாமல் வெளியே வந்து தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல நான் டிச்சார்ஜ் ஆனபிறகுதான் புகார் கொடுத்தேன்.

24.04.2023ம' தேதியிட்ட புகாரில' அடிப்பட்ட நாங்களா' வந்தவாசி அரசு மருத்துவமனையில் 22.04.2023ம் தேதி முதல் சிகிச்சையில் இருந்து வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் சரிதான். 24.04.2023ம் தேதியிட்ட புகாரில் கடைசி இரண்டு வரிகள் யார் சேர்த்தது என்றால் ஒரே நபர்தான் எழுதினாா். யார் அந்த நபர் என்றால் எனக்கு யார் என்றால் தெரியாது. புகாரை எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வீட்டில் வைத்து எழுதினேன். வழக்கிற்கு புகாா' தேவை என்பதால' 24.04.2023 தேதியிட்ட புகாரை ஒருவாக்கினோம் என்றால் சரியல்ல.

தேசூா' காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின' நகலைதான' மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் கொடுத்தேனா என்றால் சரிதான். மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில' என்னை விசாரித்தனரா என்றால' விசாரித்தனா். விசாரணையில' என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றால ' சம்மந்தப்பட்ட சொத்தானது என ' தகப்பனார் பெயரில் இருப்பதாக கூறினேன்.

2ம் எதிரி செல்வம் மற்றும் அவரது மகன் ஆஜராகி 30 செண்ட் நிலத்தினை என் வசம் விட்டுவிடுவதாக எழுதி கொடுத்தாா்கள். 24.04.2023ம் தேதியிட்ட புகாருக்கு பிறகு மீண்டும் தேசூர் காவல் நிலையத்தில் 28.04.2023ம் தேதி புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஏற்கனவே கொடுத்த புகாரைதான் மீண்டும் கொடுத்தேனா என்றால் சரிதான். 28.04.2023ம்

தேதி கொடுத்த புகாருக்கு சி.எஸ்.ஆர்கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. தேசூர் போலிசார் சி.எஸ்.ஆர் கொடுத்தார்கள் என்றாலும் அதனை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேசூர் காவல் நிலைய போலிசார் 28.04.2023ம் தேதி கொடுத்த சி.எஸ்.ஆரி-ல் செல்வம் மற்றும் ஜெயலட்சுமி பெயர் மட்டும் உள்ளதால் அந்த புகாரையும், சி.எஸ்.ஆரையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தேசூர் காவல் நிலையத்தில் 28.04.2023ம் தேதியிட்ட புகாருக்கு கொடுத்த சி.எஸ்.ஆர்-யை கையொப்பம் இட்டு வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லையென்று சொன்னாலும் மாசிலாமணி என்பவர் கையெழுத்து போடச்சொன்னதால் போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது நிலத்தில் என் பயிர் செய்திருந்தேன் என்றால் நெல்பயிர் செய்திருந்தேன். நான் விவசாயி என்பதால் பொதுவாக 4.00 மணிக்கு எழுந்து கழனிக்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான்.

எனக்கு அடிப்பட்டதாக சொல்லியிருக்கும்போது அதற்கான மருத்துவ ஆவணங்கள் மற்றும் புகைபடம் எதுவும் தாக்கல செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரின்பேரில் போலிசார் சம்பவ இடத்தில் வந்து விசாரித்து சம்மபவம் உண்மையில்லை என்பதால்தான் போலிசார் எந்தவித நடவடிக்கையும எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய நிலத்திற்கு செல்ல எதிரிகள் வழிவிடவேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகளை மிரட்டி பெறுவதற்காக அவர்கள்மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்தனர் என்றால் நிறையபேர் பார்த்தனர். அவ்வாறு சம்பவத்தினை நேரில் பார்த்த சாட்சிகளை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான சொல்வதுபோல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் கண்ணுற்ற சாட்சிகளை சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

நான் கொடுத்த புகாருக்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்றாலும் எதிரிகள் குற்றவாளி இல்லை என்றால் சரியல்ல. அதனால் எனது புகார் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல உண்மையைதான் சொல்கிறேன்.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.